1972 மார்ச் 24]

திரு. இ எஸ். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் 30 ரூபாய்தான் தரப்படுகிறது. அதனால் அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே முழுநேர ஊழியர்களாக அவர்களை மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இரண்டாவது ஊதியக் குழுவின் முடிவுக்குப் பிறகு 30 ரூபாய் 60 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை நேரம் அதிகமாக்கப்பட்டால்தான் முழு ஊதியம் கிடைக்கும். அந்த வகையில் இயக்குநர் அவர்கள் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று பள்ளிகளைச் சேர்ப்பதன் மூலம் அவர்களுக்கு முழுச் சம்பளம் அளிக்கக்கூடிய வகையில் முழு நேரம் வேலை அளிக்க முடியுமா என்பதெல்லாம் பரிசிலித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு அதுபற்றி வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

Central Polytechnic at Adyar

* 676 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the students in Central Polytechnic, Adayar, Madras, went on strike on 24th September 1971 to press their demands; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) ஆம்.

(இ) சென்னை மத்திய பல்தொழில் நிலைய மாணவர்கள், அக் கல்வி நிலையத்தில், அதிகாரிகளால் கொண்டுவரப்பட்ட தன் பதிவேடு அட்டை முறையை ஆட்சேபித்து 24-9-71 மட்டும் வகுப்பிற்குச் செல்லாமல் இருந்தார்கள், தன் பதிவேடு அட்டை என்பது மாணவர்களுடைய ஒழுக்கத்தையும், அவர்களுடைய நடத்தை, தேர்வுகளில் பெரும் மதிப்பெண் படிப்பில் முன்னேற்றம் பள்ளிக்கு வருகை முதலியவற்றைக் குறித்து வைக்கப்படும் முறையாகும். மாணவர்களுடைய நடத்தை பற்றியும், தேர்வில் மதிப்பெண் குறைவாக பெற்றால் அச் செய்தியும் அம்மாணவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படும், இதை மாணவர்கள் வரவேற்கவில்லை. இதைப்பற்றி கவனிக்கப்படும் என்று நிலைய முதல்வர் கூறியதின் பேரில், மாணவர்கள் 27-9-71 முதல் வகுப்பிற்குச் சென்றனர்.

சென்னையில் புலவர் வகுப்புக் கல்லூரிகள்

*677. வினா—**திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் தமிழ்ப் புலவர் வகுப்பு பயில்வதற்கான கல்லூரிகள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகரில் ஒன்றுமில்லை. ஆனால் தமிழகத்தில் ஒன்பது கல்லூரிகள் உள்ளன.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைநகரிலே ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். அந்தக் குறையினைப் போக்க சென்னை மாநகராட்சிப் பகுதியில் புலவர் தமிழ்க்